**MASTER**
INSTITUTES
B M C. லேன், யாழ்ப்பாணம்.
A/L விஞ்ஞானம்
வார இறுதி வகுப்பு
ஆரம்பம்: 8-1-83
5728

ரூபா விலை 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 25 மார்கழி 21 ரபி-அவ் 20 இதழ் 328
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5—1—83

**MASTER**
INSTITUTES
B M C லேன், யாழ்ப்பாணம்.
A/L விஞ்ஞானம்
பகல் நேர வகுப்பு
3-ம் பிரிவு
ஆரம்பமாகின்றது
5729

# இன ஐக்கியத்தை பலப்படுத்த சர்வகட்சிகளின் விசேட குழு!

## அரசு பாராளுமன்றக் குழு கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

**இன ஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்கு சர்வ கட்சிகளையும் கொண்ட விசேட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.**

**நேற்று நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனையின் பேரில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.**

இக்கூட்டத்தில் இன ஒற்றுமையை வலியுறுத்திப் பேசிய ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா நாட்டின் அபிவிருத்திக்கும், சுபிட்சத்திற்கும் இன ஒற்றுமை மிக அவசியம் என்றார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இக்கூட்டத்தில் தொடர்ந்து கூறியதாவது:-

''அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்த 27 லட்சம் மக்களின் நலன்களை நாம் புறக்கணிக்க முடியாது அவர்களுக்கும் சேவை செய்யவேண்டும்.

### சிறுபான்மை மக்கள் பிரச்னை

''புலிப்படைகளின் வன்முறைப் பிரசாரங்களிலிருந்து சிறுபான்மை மக்களின் பிரச்னைகள் வேறுபடுத்தப்பட வேண்டும். ஈழம் கோருபவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவேண்டும்.

'நாட்டில் பிளவை ஏற்படுத்த ஐ. தே. கட்சி அரசாங்கம் இடமளிக்காது. பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் சில மதகுருமார்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யப்படும். ஏற்கனவே அரிசி கூப்பன் மோசடி தொடர்பான வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

''77ம் ஆண்டு தேர்தலின் போது சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் என அறிவித்தோம் அவற்றுள் சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.

''வடக்கில் பயங்கரவாதத்தை ஒழிக்கநடவடிக்கை எடுக்கப்படும்.

''மலைநாட்டு தமிழர்களை சரியான பாதையில் அமைச்சர் தொண்டமான் அழைத்து செல்கிறார்.

### தமிழ் மக்கள் ஆதரவு

''தோட்டப்பகுதி, கிழக்கு மாகாணம், வன்னிப்பகுதி தமிழ் மக்கள் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

''பிரச்னைகள் அபிவிருத்தி சபைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும். அடுத்தவரவு செலவுத்திட்டத்தில் அபிவிருத்தி சபைகளுக்கு கூடிய நிதி ஒதுக்கப்படும்'' என்றார்.

இக்கூட்டத்தில் பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசாவும் உரையாற்றினார்.

[க-வெ]

வல்வை கடற்கரையில்

## ரூ. 75 ஆயிரம்பெறுமதியான கடத்தல்துணி பிடிபட்டது

### வள்ளமும் பொருட்களும் பறிமுதல்

(மாவிட்டபுரம்)

வல்வெட்டித்துறை கடற்கரையில் கொத்தியால்வான் என்ற இடத்தில் இந்தியாவில் இருந்து பொருட்களைக் கடத்தி வந்த வள்ளம் ஒன்றைத் தொண்டமானாறு இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

எழுபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான இந்தக் கடத்தல் துணிகளில் காஞ்சிபுரம் சேலைகள், பட்டு வேட்டிகள் மற்றும் ஜவுளிகள் காணப்

(௪-ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத்தின்

## புதிய கூட்டத்தொடர் பெப். 9ல் ஆரம்பமாகும்!

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 9-ம் திகதி ஆரம்பமாகும்.

தற்போதைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் இம்மாதம் 7-ம் திகதியுடன் கலைக்கப்படும்.

[8-ம் பக்கம் பார்க்க]

## நிர்மலா ஆட்கொணர்வு மனு ஜனவரி 10-ல் விசாரணை!

(கொழும்பு)

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆசிரியை நிர்மலா நித்தியானந்தனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வுமனு இம்மாதம் 10ம் திகதி விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்படும்

இம் மனுவில் அவரின் தகப்பனாரான யாழ். நாவலர் வீதியைச்சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை இராஜசிங்கம் மனுதாரராக காட்டப்பட்டுள்ளார்

இம்மனுவை சட்டத்தரணி ஸ்ரீ வி. விவேகானந்தன் தயாரித்து நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். [இ]

நீர்வேலி கொலை, கொள்ளைவழக்கு:

## குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்பதா இல்லையா?

### நாளை தீர்ப்பு வழங்கப்படும்

[கொழும்பு]

நீர்வேலி, கொலை, கொள்ளை வழக்கில், நான்காவது எதிரியான சிவபாதன் மாஸ்டர் பொலிசாருக்குக் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது சம்பந்தமான தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு சி. எல். டி. மூனமல நாளை 6-ம் திகதி தீர்ப்பு வழங்குவார்.

எதிர்தரப்பு சட்டத்தரணி திரு என் சத்தியேந்திரா கிளப்பிய ஒரு ஆட்சேபனையைத் தொடர்ந்து விசாரணைகளுக்கிடையில் நடைபெறும் புறம்பான 'வொயா-டயர்' விசாரணை நடைபெற்று வந்தது

இருவாரகால நீதிமன்ற விடுமுறை காரணமாக விசாரணைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டு, மீண்டும் விசாரணைகள் ஆரம்பமாகின.

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கு முதலாம் எதிரி தங்கத்துரையும், அரசதரப்பில் ஏ எஸ் பி ஜெயரம்பதியும் சாட்சியமளித்து, குறுக்குவிசாரணை செய்யப்பட்டனர்.

எதிர்தரப்பு சட்டத்தரணி திரு என் சத்தியேந்திரா, பிரதி சொலிஸிஸ்டர் திரு. சுனில் டி சில்வா ஆகியோர் தொகுப்புரை முடித்தபின்னர் நேற்று, நீதிபதி திரு சி. எல். டி மூனமல நாளை இது சம்பந்தமான தீர்ப்பு வழங்கப்படுமென்று அறிவித்தார். (இ)

**அரிய சந்தர்ப்பம்**

I D P M Computer London Exam)
COMPUTER PROGRAMMING

செய்முறைப் பயிற்சிகளுடன் நடைபெறும்
றேடியோ - டெலிவிசன்
ஏயர் கொண்டிசனிங் - Hotel Management

பயிற்சிகள் ஆரம்பம் 09-01-83

விபரங்களுக்கு நேரில் வரவும்.

**The School of Computer Studies**
52/1, கனகரத்தினம் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
5709

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிளிநொச்சி 7ம் வாய்க்காலில் ஒரு ஏக்கர் உறுதிக் காணி கல்வீடு, நல்ல தண்ணீர் கட்டுக்கிணறு நல்லபலன் தரக்கூடிய தென்னை, கமுகு பழ மரங்கள் உட்பட விற்பனைக்குண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம், சா. சத்தியானந்தம், 7ம் வாய்க்கால், ''கௌரிவாசம்'' கிளிநொச்சி. 5683

தாவடி வடக்கில் 11 பரப்பு வீடுகட்ட நல்லஇடம். காணிக்கு வடஎல்லை நீட்டிற்கு 12 அடிப்பாதை உண்டு. ரோட்டுக்குக்கிட்ட; வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; செ. ஜோதிநாதன், தாவடி. (தரகரில்லை) 5720

சகல வசதிகளும் கொண்ட கல்வீடு 2½பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் . P சுப்பிரமணியம், No; 58, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 5723

### தேவை

அனுபவமும், திறமையும் வாய்ந்த தச்சுவேலை செய்பவர்கள் — மரத்தளபாடம் பொலிசிங் செய்யக் கூடியவர்கள், உதவியாளர்கள் தேவை நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். டில்காபேணிச்சர் பலஸ், 234, 236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 5722

### பயிற்சி

3மாதகால முழுநேர போதுவிவசாயப் பயிற்சி. 17–25 வயதுக்குட்பட்ட இரு பாலாருக்கும் சாதனை—போதனை வகுப்புகள் ஆரம்பமாகின்றது. சிறு ஊதியம் வழங்கப்படும். ஆண்களுக்கு விடுதிவசதி உண்டு விண்ணப்ப முடிவு திகதி; 10–1–83. அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம், மருதனமடம், சுன்னாகம். 5721

## மீண்டும் வேலை பெற்றார்

(கிளிநொச்சி)

20 மாதங்களாக வேலை இழந்திருந்த திருவையாறு உபதபால் நிலைய அதிபர் திரு என். யோகேந்திரநாதனிற்கு மீண்டும் வேலை கிடைத்துள்ளது இலங்கை தபாற்சேவையாளர்சங்க செயலாளரும், தொழிலாளர் காங்கிரஸ்பிரதிநிதியுமான திரு செ.. சபாரத்தினம் அமைச்சர் திரு சௌ தொண்டமானிடம் தொடர்புகொண்டு திரு யோகேந்திரநாதனிற்கு வேலை வழங்குமாறு கோரியிருந்தார். அமைச்சர் தொண்டமான் எடுத்த நடவடிக்கையின் பேரிலே பிரஸ்தாப தபாலதிபருக்கு மீண்டும் வேலை கிடைத்துள்ளது. (அ)

## நபிகள்நாயகம் பிறந்ததின விழா

(புலோலி)

பருத்தித்துறை மந்திகை பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா சமிதியில நபிகள் நாயகம் பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது அன்றையதினம் விசேஷ பஜனைகளும் இடம் பெற்றன.

# அரசு-தமிழர் கூட்டணி மீண்டும் உயர்மட்டப்பேச்சு?

## பேராசிரியர் வில்சன் எடுத்துள்ள முயற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் அரசாங்கத்துக்குமிடையே மீண்டும் உயர்மட்டப் பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சு வார்த்தை நடைபெறுவதற்கு காரணகர்த்தாவாக இருந்த பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் கனடாவிலிருந்து கொழும்பு வந்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குமிடையே ஏற்பட்ட சில பிணக்குகளின் போது பேராசிரியர் வில்சன் அழைக்கப்பட்டு, இருபகுதியினருக்குமிடையே சுமுகமான நிலையை ஏற்படுத்திவந்தார். பாராளுமன்றபதவி காலத்தை நீடிப்பது சம்பந்தமாக பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதைத்தொடர்ந்து, அரசுக்கும் கூட்டணிக்குமிடையே 'பிளவு' ஏற்பட்டுள்ளது.

பொதுசன வாக்கெடுப்பில் வெற்றியடைந்த பின்னர் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு அரசு ஆலோசனை நடாத்திவருகிறது. மற்றும் உப ஜனாதிபதிகளை நியமிக்கவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இவை குறித்தும் அரசாங்கத்துக்கும், தமிழர்விடுதலைக் கூட்டணிக்குமிடையே மீண்டும் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்தும் முகமாக பேராசிரியர் வில்சன் வருகைதந்திருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (மா)

# "தங்கத்துரை, குட்டிமணி தலைகீழாக தொங்கவிடப்படவில்லை!"

## நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கில் ஏ. எஸ். பி.

(கொழும்பு)

''முதலாம் எதிரியான தங்கத்துரையோ, அல்லது 2வது எதிரியான குட்டிமணியோ தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கையில், தலைகீழாகக்கட்டித் தொங்கவிடப்படவில்லை; அவர்களது உடலில் மிளகாய்த்தூள் போடப்படவுமில்லை''

இவ்வாறு நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கில் சாட்சியமளிக்கையில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜயரம்பதி கூறினார்.

இந்த வழக்கு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. எல். ரி. மூனமலை முன்னிலையில் 33வது நாளாக நேற்றுமுன்தினம் விசாரிக்கப்பட்டது.

திரு. ஜயரம்பதி சாட்சியத்தைப் பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் திரு.சுனில் டி சில்வா நெறிப்படுத்தினர்.

சுனில்; முதலாவது எதிரியான தங்கத்துரை 81 ஏப்ரல் 7ம் திகதிக்கும் 10ம் திகதிக்குமிடைப்பட்டகாலத்தில் உமது முன்னிலையில் பல பொலிஸ் அதிகாரிகளினால், கடுமையாகத்தாக்கப்பட்டதாக இங்கு கூறியுள்ளார்!

சாட்சி: நான் அதை மறுக்கிறேன்.

சுனில்: நீர் உமது காலால் கடுமையாகத் தாக்கியதாக தங்கத்துரை இங்கு கூறினார்.

சாட்சி: நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

சுனில்: அவரையாராவது 'எஸ்–லோன்'சைப்பினால் தாக்

(7–ம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் சுப்பிரமுனிய சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் நாளை புதன்கிழமை கோப்பாயில் சிவலிங்கப்பிரதிஷ்டாகும்பாபிஷேகம்செய்து செய்துவைக்கவுள்ளார்.

கோப்பாய் பழையவீதி வீரபத்திரர்கோவிலடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டத்திலேயே இக் கும்பாபிஷேகம் நிகழும்.

புதன் மாலை நிகழவிருக்கின்ற இக் கும்பாபிஷேகத்திற்குரிய நிகழ்ச்சிகள் அனைத்தும் அன்று காலையிலேயேஆரம்பிக்கப்படும். (ப)

## கைலாசபதிக்கு இன்று யாழ். நகரில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

மறைந்த யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும், சிறந்த ஆய்வறிவாளருமான பேராசிரியர் க. கைலாசபதிக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் இன்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

சட்டத்தரணியும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவரும், தினகரன் பிரதம ஆசிரியருமான திரு. இ சிவகுருநாதன் தலைமையில் இந்த அஞ்சலிக்கூட்டம் நடைபெறும்.

மறைந்த பேராசிரியரின் குடும்பத்தினர் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன், திருமதி தேவநேசன் நேசையா, யாழ். பல்கலைக்கழக நிதியாளர் திரு. எஸ் ஆலாலசுந்தரம் ஆகியோர் விழாஆரம்பத்தில் பேராசிரியரின் திருவுருவப்படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்துவார்கள்.

விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், வண ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள், யாழ் மாவட்ட அபிவிருத்திசபை பிரதித் தலைவர் திரு. எஸ். நாகராசா, யாழ். மேயர் திரு. இராசா விஸ்வநாதன், உட்பட பல கல்விமான்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் உரையாற்றுவார்கள்

விழாஆரம்பமாவதற்குமுன்னதாக யாழ்ப்பாணம் தினகரன் காரியாலயத்திலிருந்து பேராசிரியரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். திருவுருவப்படத்துக்கு பேராசிரியரின் தந்தை திரு. இ. கனகசபாபதி மலர்மாலை அணிவித்து ஊர்வலத்தை ஆரம்பித்துவைப்பார்.

ஆஸ்பத்திரி வீதி வழியாக ஊர்வலம் சென்று கட்டட மண்டபத்தை வந்தடையும். வர்த்தகர்கள் பூரணகும்பம் வைத்து திருவுருப்படத்துக்கு அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த விழா ஏற்பாடுகளை அமைப்புக்குழு சார்பில் திரு. எம். செல்வராசா செய்து முடித்துள்ளார்.

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 20ந் திகதி
புதன்கிழமை
[5—1—83]

மேடம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும். செல்வாக்குப் பாதிக்கப்படலாம். அயலவர்களுடன் அன்புடன் நடந்துகொள்ளவும்.

இடபம்: இதமான வாழ்வு இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும் இறைபக்தி மேலோங்கும். பிதாவழித்தனமும் சேரும்.

மிதுனம்: செய்தொழில் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும் பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. போட்டாபோட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். விளையாட்டு வீரர் முதலிடம் பெறுவர்.

கடகம்: அதிஷ்டலாபங்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன புதுத்தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்றதினம் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரும்.

சிங்கம்: முயற்சியால் முட்டுக்கட்டை தென்படும் மற்றவர்களிடம் குறைகேட்கநேரிடலாம் நண்பர்களின் தொல்லை எரிச்சலைத்தரலாம் சிலர் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கன்னி: எதிலும் தயக்கநிலை தென்படும் நண்பர்களும்குறை கேட்க நேரிடும். பொருளாதாரத்துறையில் மந்தநிலை தென்படுகிறது. வாய்வு பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

துலாம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள் குடும்பத்தில் சுமுகமான சம்பவம் இடம் பெறும்.

விருச்சிகம்: ஆசாரக் குறைவானசம்பவங்கள்இடம்பெறும் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும் குடும்பத்தில் சிறியபூசல்கள் தோன்றி மறையலாம் கொடுக்கல் வாங்கல் தவிர்க்கப்படவேண்டும்.

தனு: அன்னையின் அன்பு தாராளமாகக்கிடைக்கும் செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும் குடும்பத்தில் முன்னேற்றத்துக்கும் இடமுண்டு கல்விப்பணியில் செல்வாக்குப் பெருகும்.

மகரம்: பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம் சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

கும்பம்: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறுபிணி தலைதூக்கும் சிறிய விடயத்துக்குக்கூட பெரிய கோபம் தோன்றும்.

மீனம்: சுவையான சம்பவங்கள் மனதுக்குக்கு மகிழ்ச்சி வைத்தரும் எதையும் ஒழுங்கு முறையில் செய்வதால் திருப்தியடைவீர்கள் பெற்றோரின் பூரணகட்டுப்பாட்டில் நடப்பீர்,

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

### அமெரிக்கசைவத்திருச்சபைத் தலைவர்

# சுப்பிரமுனிய சுவாமியை அமைச்சர் 'இராசு' வரவேற்றார்

[கொழும்பு]

அமெரிக்காவைச் சேர்ந்த சைவசித்தாந்த திருச்சபைத் தலைவர் குருதேவர் ஸ்ரீசிவாய சுப்பிரமுனியசுவாமிகள் தமது சீடர்கள் 40 பேருடன் இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

ஹவாயிலே சைவசித்தாந்த ஆலயத்தையும், ஹவாய் ஆதீனத்தையும் ஸ்தாபித்து உலகளாவிய முறையிலே சைவப்பணிபுரிந்து வரும் சுவாமிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பு வந்துசேர்ந்தார். பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்திற்குச் சென்று குருதேவரையும், மற்றைய சுவாமிகளையும் மாலை அணிந்து வரவேற்றார்.

ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கும், அவரது குழுவினருக்கும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரதேச அபிவிருத்தி அலுவலகத்தில் திரு. செ இராசதுரை தேநீர் விருந்தளித்துக்கௌரவித்தார்

இவ்வரவேற்பு உபசாரத்தின்போது, அமைச்சர் 'இராசு' சுவாமிகளுக்கு அகில உலக இந்துமாநாடு தொடர்பான நூல்களையும் பரிசுகளையும் வழங்கி தமது அமைச்சின் பணிகள் குறித்து எடுத்துரைத்தார். (இ)

## குருவானார்

(மன்னார்)

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்செல்வன் சாமிநாதன் பொறளை புனித சகாயமாதா ஆலயத்தில் வைத்து கொழும்பு ஆயரினால் குருவாக திருநிலைப்படுத்தப் பட்டார்.

இவர் தமது முதலாவது திருப்பலிப் பூசையை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இம்மாதம் 19 ஆம் திகதி ஒப்புக்கொடுப்பார். [ப]

## செக். தலைநகரில்

# வார்ஸோநாடுகளின் இரகசிய உச்சி மகாநாடு!

## சோவியத் செயலாளர் நாயகம் அந்திரபோவும் கலந்து கொள்வார்

பிராக், ஜன 4

வார்ஸோ உடன்படிக்கை நாடுகளான 7 கம்யூனிஸ்ட் நாடுகளின் முதலாவது உச்சி மகாநாடு இன்று செக்கோஸ்லாவேக்கியாவின் தலைநகரான பிராகுவில் நடைபெறவிருக்கிறது.

இம் மகாநாட்டின் செய்திகள் மேற்கு உலகின் செய்தி நிறுவனர்களுக்கிடைக்காதபடி பாதுகாக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சோவியத் யூனியன், செக்கோஸ்லாவேக்கியா, போலந்து, பல்கேரியா, ருமேனியா, கிழக்குஜெர்மனி, ஹங்கேரி ஆகிய நாடுகளின் தூதுக்குழுவினர் இம் முதலாவது உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள பிராகுவிற்குச் சென்றுள்ளனர் வார்ஸோ உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ள இந்த ஏழு கம்யூனிஸ்ட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் ஆலோசனை கூட்டம் நேற்று பிராகுவில் நடைபெற்றுள்ளது. இதனை அடுத்தே மேற்கு உலக நாடுகளுக்கு இவ்வுச்சி மகாநாட்டில் செய்திகள் கிடைக்காது பாதுகாக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

### அந்திரபோவ் முதல் விஜயம்

சோவியத் யூனியனின் மாநாட்டுக் குழுவில் சோவியத் யூனியன் பிரதமர் வெளியுறவு அமைச்சர், கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகம் திரு அந்திரபோவ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராகத் தெரிவுபெற்ற திரு. அந்திரபோவ்வின் முதல் வெளிநாட்டு விஜயமாகவும் இவ்விஜயம் அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் வார்ஸோ உடன்படிக்கையின் 7 கம்யூனிஸ்ட் நாடுகளின் தூதுக்குழுவில் சோவியத் தூதுக்குழுவே மிக வலுவுடையதாக உள்ளது. (உ)

## பங்களாதேஷில் பொதுத்தேர்தல் வேலைகள்

டாக்கா, ஜன. 4

பங்களாதேஷ் இராணுவ ஆட்சித் தலைவர் முன்பு அளித்த வாக்குறுதிப்படி விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

பங்களாதேஷின் வானொலி, தொலைக்காட்சி சேவைகள் இச்செய்தியை முக்கியத்துவம் கொடுத்து கடந்த இரவு அறிவித்துள்ளன.

பொதுத் தேர்தலின் வாக்காளர் பட்டியலுக்கான வேலைகள் இம்மாதம் 28ந் திகதி முதல் அதிகாரபூர்வமாக நடைபெறும் என்றும், பூர்வாங்க வேலைகள் தற்பொழுது ஆரம்பித்துள்ளதாகவும் பங்களாதேஷ் தலைமைத் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் அறிவிக்கின்றார், (உ)

# மண் சுமந்த ஜனாதிபதி றீகன்

வாஷிங்டன், ஜன, 4

அமெரிக்காவின் லூசியானா மாநிலத்திலுள்ள எமொன்றோ என்ற இடத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ள நீரைத் தடுக்க ஜனாதிபதி றீகனும மூடைகளினுள் மண்ணை நிரப்பினார்!

ஜனாதிபதி றொனல்ட் றீகன் தமது ஓய்வு நாட்களை கழித்துவிட்டு இந்த மாநிலம் வழியாக வாஷிங்டனுக்குப் பறந்து கொண்டிருந்தார்!

அப்போதே இந்தவெள்ள நிலைமையக் கண்டு தனது ஹெலிகாப்டரை இந்த இடத்தில் இறக்கி, நிவாரணப் பணியாளர்களுடன் ஒருவரானார்!

ஒரு சில நிமிடங்களே திரு றீகன் இப்பகுதிப்பணியாடகளுடன் சேர்ந்து மண் மூடைகளில் மண்ணை நிரப்பினார்!

இத்துடன் வெள்ளத்தினால் இந்த பாதிப்படைந்துள்ள சுமார் 10,000 மக்களுக்கு தாம் உடனடியாக மேலும் உதவிகளைச் செய்து தருவதாக உறுதியளித்தார்.

வெள்ளத்தினால் சுமார் 50 கோடி டாலர்கள் நட்டம் இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ளது (கி)

## இந்தியாவில்

# மூன்று தென் மாநிலங்களில் இன்று பொதுத்தேர்தல்

புதுடில்லி, ஜன. 5

பாரதத்தில் கர்நாடகம், ஆந்திரா, திரிபுரா மாநிலங்களின் சட்ட சபைக்கான பொதுத்தேர்தலின் வாக்குப் பதிவு இன்று காலை 8 மணிக்கு ஆரம்பிக்கின்றது. இத்தேர்தல்களில் 5 கோடி 80 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்

ஆந்திரா மாநிலத்தில் 294 தொகுதிகளுக்கும், கர்நாடகத்தில் 224 தொகுதிகளுக்கும், திரிபுராவில் 60 தொகுதிகளுக்கும் சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் பொதுத்தேர்தலின் வாக்குப்பதிவுகள் இன்று நடைபெறும். தேர்தல் முடிவுகள் நாளை மாலைக்குள் வெளியிடப்படும்.

ஆந்திராவில் சாத்நகர், கர்நாடகத்தில் சாந்திநகர், திரிபுராவில் வானமாலி ஆகிய தொகுதிகளில் இயந்திரமூலமான வாக்குப்பதிவுகள் நடைபெறும். ஆந்திராவில் ஒரு தொகுதியிலும் கர்நாடகத்தில் ஒரு தொகுதியிலும் வேட்பாளர்கள் மரணமடைந்தமையால் தேர்தல் வாக்குப் பதிவுத்தினம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கை அறிய இம்மூன்று மாநிலத்தேர்தல்களு வாய்ப்பளிப்பதாகவுள்ள தென்று அவதனிகள் தெரிவிக்கின்றனர் இந்திரா காங்கிரஸ் கட்சி கடந்த பொதுத் தேர்தலுக்குப்பின் சந்திக்கும் பொம் பொதுத்தேர்தல் இவையே. பாரதத்தின் பொதுத்தேர்தலுக்கு மேலும் இரு ஆண்டுகள் உள்ளன

இன்று நடைபெறும் பொதுத்தேர்தலுக்குரிய கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் இந்திரா காங்கிரஸ் கட்சியே ஆட்சிசெய்தமை குறிப்பிடத்தக்கது. திரிபுராவில் மட்டும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிசெய்தது கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் மீண்டும் இந்திரா காங்கிரஸ் கட்சி பதவியைக் காப்பாற்றவேண்டிய நிலையிலுள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு தேசக் கட்சித் தலைவரும் நடிகருமான என். டி. ராமராவின் நேரடிப் போட்டியையும், கர்நாடகத்தில் எதிர்கட்சிகளின் செல்வாக்கையும் சமாளிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (உ)

## லெபனன்-இஸ்ரேல் பேச்சுவார்த்தை

# ஆரம்பகட்டமே இழுபறிபடுகிறது

பெய்ரூட், ஜன. 4

லெபனன் – இஸ்ரேலிய சமாதானப்பேச்சுக்கள் நேற்று முன்தினம் வரை 3 தடவைகள் நடைபெற்ற போதும் இணக்கம் ஏற்படாது இழுபறியாகவே உள்ளது.

இச்சமாதானப் பேச்சுவார்த்தை லெபனனுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே கடந்த ஆண்டு டிசம்பர் 27ந் திகதி ஆரம்பித்து நேற்று முன்தினம் வரை 3 கட்டங்களாக நடைபெற்றபோதும் இணக்கம் காணப்படவில்லை.

லெபனனிலிருந்து இஸ்ரேலிய படைகளின் வாபஸ் குறித்தே முதல் ஆராயப்பட வேண்டுமென்று லெபனன் வற்புறுத்துகிறது இதேவேளை இஸ்ரேல் உறவுகளைச் சீர்படுத்துவதையே முதலில் ஆராய வேண்டுமென்று கூறுகிறது. இதனாலேயே பேச்சுவார்த்தையில் இழுபறிகாணப்படுகிறது. (உ)

## 'யானைகளின் பூமி'யில் தோன்றியுள்ள ஆபத்து

தாய்லாந்து ஜன 4.

யானைகளின் பூமி என்று பெயர்பெற்ற பர்மா நாட்டில் யானை இனங்கள் அருகி வரும் ஆபத்து தோன்றியுள்ளது!

ஆசியாவில் 35,000 யானைகள் உள்ளன! பர்மாவில் மட்டும் 3000 முதல் 6500 வரை இருக்கின்றன! இத்தொகையைவிட மேலதிகமாக 3500 லிருந்து 4800 வரையிலான யானைகள் இங்கு பழக்கப்பட்டு வேலைவாங்கப்படுகின்றன!

இவ்வாறு யானைகளைப் பழக்கி எடுப்பதற்காக ஒவ்வொருவருடமும் சுமார் 100 யானைகளை இங்கு பிடித்து வருகிறார்கள்.

இரண்டாம் உலகப்போருக்கு முன்னர் பர்மாவில் உள்ள யானைகள் தொகையில் 10 வீதமே பிடிக்கப்பட்டுவந்தன. தற்போது 60 வீதம் பிடிக்கப் பட்டுவருகின்றன.

யானைகள் பர்மா காடுகளிலிருந்தும் பெருந் தொகையில் பிடிபடுவதனால் அவற்றின் உயிர்வாழும் வயதெல்லை குறைவடைந்து வருகிறது என்று உலக வனவிலங்குச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு யானை காட்டினுள் வாழ்ந்து வருமானால் 80 முதல் 150 வருடங்கள் வரை உயிர் வாழும். ஆனால் முற்றிலும் வேறுபட்ட நகரச் சூழலில் 60 முதல் 70 வருடங்கள் மட்டுமே அதனால் உயிர்வாழ முடியுமென்று அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

எனவே தற்போது பர்மாவில் வருடந்தோறும் நூற்றுக் கணக்கில் யானைகளைப்பிடித்து நகரச் சூழலில் வாழவைப்பது இந்த இனங்களின் விருத்தியை குன்றச் செய்யும் நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகின்றது. (கி)

## திரைப்பட உற்பத்தியில் சென்னை சாதனை

சென்னை, ஜன. 4

சென்னை திரைப்பட உற்பத்திதுறை கடந்த ஆண்டில் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளதாக பாரத திரைப்பட அபிவிருத்திக்கமிஷன் அறிவிக்கிறது.

1982ல் மட்டும் சென்னையில் மொத்தம் 486 திரைப்படங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 75 இந்தி மொழியிலும், 136 தமிழ் மொழியிலும், 56 தெலுங்கு மொழியிலும். 116 மலையாள மொழியிலும், 51 கன்னட மொழியிலும், 50 பிறமொழிகளிலும் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களாகும்.

1981ல் சென்னையில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களின் தொகையை விடக் கடந்த ஆண்டின் தயாரிப்புகள் பெருமளவு தொகையாக உள்ளது. (உ)

## 9-வது சர்வதேச திரைப்பட விழா ஆரம்பம்

புதுடில்லி ஜன. 4

பாரத அரசின் தகவல் அமைச்சர் திரு. சால்வே நேற்று 9வது சர்வதேசத்திரைப்பட விழாவை ஆரம்பித்து வைத்தார் இத்திரைப்படவிழாவில் 60 நாடுகளின் 150 திரைப்படங்கள் திரையிடப்படும்.

நேற்றுப்புதுடில்லியில் நடைபெற்ற 9வது சர்வதேசத் திரைப்பட விழவில் மொரோக்கோ நாட்டுத் தயாரிப்பாளரின் தென்னாபிரிக்க இன ஒதுக்கல் பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது.

மலையாளத் திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமான ஆர் கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு 1982ம் ஆண்டுக்கான 'பிரிட்டிஷ் திரைப்படத் தயாரிப்பு விருது' வழங்கப்பட்டது

பாரதத்தின் தகவல் அமைச்சர் திரு சால்வே தமது ஆரம்பவிழா உரையில்; பாரத அரசு திரைப்பட இறக்குமதியில் தராள இறக்குமதிக் கொள்கையையே கைக்கொள்ளுகின்றது. ஆரம்பித்துள்ள சர்வதேசத் திரைப்பட விழா திரைப்பட இறக்குமதி, ஏற்றுமதியாளர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் சிறந்ததோர் திரைப்படச் சந்தையை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது" என்று கருத்துத் தெரிவித்தார். (உ)

## அன்டாட்டிக்காவில் பாரத ஆய்வுக்குழு

புதுடில்லி, ஜன 4

அன்டாட்டிக்கா பனிக்கண்டத்தில் தங்கியுள்ள 2வது பாரத விஞ்ஞான ஆய்வுக்குழுவினர் தமது ஆய்வுப்பணிகளை ஆரம்பித்து நடாத்துகின்றனர்.

ஆய்வுக்குழுவின் தலைவரும். ஏனையோரும் தாம் சென்ற பாதுகாப்புக் கப்பலை விட்டு வெளியேவந்து தங்குமுகாமை அமைத்துள்ளதாகவும் விஞ்ஞான ஆய்வுவேலைகளின் பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும், ஆய்வுக்குழுவைச் சேர்ந்தயாவரும் நல்ல ஆரோக்கிய நிலையில் இருந்து செயல்படுவதாகவும் ஆய்வுக்குழுத்தலைவர் புதுடில்லிக்கு அனுப்பியுள்ள செய்தியில் இன்று காலை தெரிவித்துள்ளார். (உ)

## பர்மிய சுதந்திரதினம் இன்று

புதுடில்லி, ஜன. 4

பர்மாவின் சுதந்திர தினம் இன்று இதனை முன்னிட்டு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, பாரத ராஷ்டிரபதி திரு. ஸெயில்சிங், பாரத மத்திய அரசின் வெளியுறவு அமைச்சர் ஆகியோர் தமது வாழ்த்துச் செய்திகளை பர்மிய அரசுக்குத் தெரிவித்துள்ளனர். (உ)

### மணிவாக்கு

நாம் ஏதேனும் ஒரு விடயத்தைப் பற்றி முடிவு செய்யுமுன் அதற்கு அடிப்படை உண்மைகளிருக்கின்றனவா என்று அறிதல் வேண்டும்.

— இங்கர்சால்

# நமது நோக்கு

## உணவுக் குழைப்பு

''வாழ்க்கைச் செலவு கூடிக்கொண்டு போகும் இவ்வேளையில்''

மேடைப் பேச்சுப் பழகும் எவருக்கும் வாய்ப்பான தொடக்கம் இது.

சடுதியாக வாழ்க்கைச் செலவு வீழ்ந்து விட்டால் இவர்களின் கதியென்ன?

'வாழ்க்கைச் செலவு', 'பாவனையாளர்' போன்ற பதங்கள் மேற்கத்திய நாகரிகத்தின் 'வெடுக்கு' அடிக்கும் பண்டங்கள்.

நாமெல்லோரும் மனிதர்கள் உழைத்து உண்ணப் பிறந்தவர்கள் மற்றவர்களின் உழைப்பில் சுகவாழ்வு வாழப் பிறந்தவர்களல்ல.

நாம் எவரானாலும் எங்கள் மூலவேர் — அடி அத்திபாரம் கடவுள் படைத்த கிராமத்திலேயே அமைந்திருக்கிறது.

சிலகாலமாகப் பேசப்பட்டுருவம் வாழ்க்கைச் செலவு, வாழ்க்கைத்தரம், உணவில் தன்னிறைவு போன்ற கருத்துக்கள், மேற்நாட்டு பொருளாதாரப் பேச்சுவழக்கு இவற்றை நாம் வெறுத்துத்தள்ள வேண்டுமென்பதல்ல,

நாம் எங்கள் நாட்டுக்குரிய எங்கள் கிராமங்களின் அபிவிருத்திக்குரிய அடிப்படைத் தேவைகளையும் திட்டங்களையும் சிந்திப்பது அவசியமென்பதையே வற்புறுத்துகின்றோம்.

பனையும் பசுவும் எங்கள் பண்பாட்டின் இருகண்கள்; இவற்றை வளர்த்து நாம் வாழ்க்கைச்செலவைக் கட்டுப்படுத்த முடியாதா? பசுவைக்கால் நடையென்றும் பனை மாநாட்டுக்குரிய விடயமென்றும் கொள்வதே எங்கள் புனர்வாழ்வுக்கேற்பட்ட சிக்கல்கள்.

ஆனால் எங்கள் நாட்டின் புவியியல், சுவாத்தியம், வரலாறு — இவையெல்லாம் நாட்டின்கிராமங்களிலேயே எங்கள்மேம்பாடுதங்கியிருப்பதை வற்புறுத்துகின்றன.

கிராமங்களின் உயிர் நிலையம் இன்று கிராமிய பொருளாதாரத்தில் தங்கியிருக்கின்றது. அதனை வளர்க்க வழிதெரியாமல் கிராமமக்கள்பட்டினத்துக்கு தொழில் தேடிப் போவதில இரண்டையுங்கெடுத்து விடுகின்றனர் வாழ்க்கைத்தரமென்ற சாசுக்குப் பலியாகின்றனர்.

வாழையடி வாழையென தொடர்ந்து வந்த கிராம வாழ்வு பேனுட்டு நாகரிகத்தின் தாக்கத்தினுல் தாழ்வடைந்திருக்கிறது. பண்பு குலைந்திருக்கிறது.

இந்த நிலை மாறுவதே, இதனை மாற்றுவதே நோக்கமாகக்கொண்டன இன்று பேசப்படும் பனம்பொருள் மாநாடு, கால்நடை, அபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் கருத்தரங்கு. 'விவசாயமும் வீட்டுத்தோட்டமும்' போன்ற கண்ணைக்கவரும். ஆனால் கருத்தைக் கவராத தலைப்புக்கள் பற்றிய விவாதங்கள்.

யாழ்ப்பாணத்தில் பனைக்கு ஒரு சர்வதேச மாநாடு நடத்திவிட்டால் அதுஇங்கு ஒன்றிரும்பனைவளத்துக்கு உற்சாகமூட்டவல்லது. எனவே பனை வளர்ச்சிக்கு மாநாடு நடக்கட்டும் அதன் உண்மையான தாக்கம் எவ்வகைப்பட்டது?

இன்று பாடசாலைகளில் பயிலும் இளைஞர், தாங்கள் பாடசாலைத்திட்டமிடப்படாதிருக்கும் ஆர்வத்தினை... க்கு மாறவேண்டு

இவ்வித பனைப் புரட்சி, பசுப்புரட்சி, கோழிப்புரட்சி வீட்டுத் தோட்டப் புரட்சியேஎங்கள் நல்வாழ்வுக்கு கண்கண்ட மருந்து.

இல்லாதது, அவுஸ்திரேலியா, இலங்கைபோன்ற நாடுகளின் தலைநகரங்களில் 'கிரிக்கட் சீசன்' என்றால் என்ன குதூகலம்! இது பித்துப்போன்று நாட்டுப்புறத்துக்கும் பரந்து நமது கிராமிய இளைஞர்களையும் பிடித்திருக்கிறது இவ்வித கவர்ச்சி, உழைப்பிலும் உண்டாக வேண்டும்; இது ஒரு பின்னடிக்கும் செயலல்ல. வறுமையை குற்றக் கொடுமையை ஒழிக்கும் செயல்.

எங்களுக்கென்றே தெய்வம் உதவிய படைப்பு பனை; அரசாங்க உத்தியோகத்தைத் தேடினமையால் அதனைக்கைவிட்டோம். அந்தக்காலம் கோழி வளர்ப்பினும் கோரணமேந்தில் எளிறகாலம். போனது போகட்டும்.

இன்று உடம்பால் உழைக்காது உண்ணும் ஆண், பெண், பிள்ளையாவரும் கள்வர்களே என்பதில் ... தவறு.

வழிப்பறிக் கொள்ளை, கோஷ்டிக்கொள்ளை, வங்கிக் கொள்ளை, வீடுடைப்புக் கொள்ளை, ஆயுதக்கொள்ளை வாகனக்கொள்ளை இவற்றால் ஏற்படும் கொலை கடந்த ஆண்டில் அதிகரித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சு புள்ளி விபரப்பட்டியல்சமர்ப்பித்திருக்கிறது.

இவ்வித கொள்ளைகள் பெருகி வருவதன் அடிப்படைக் காரணம் என்ன? உழைப்பின்மை; உழைக்க வசதியற்று, அல்லதுவிருப்பமற்று இலகுவாகப் பணம் தேடும் முயற்சியே களவு. நாமனைவரும் கவலையுடன் சிந்திக்கவேண்டிய சமூகப் பிரச்னை.

களவெடுத்தல் கிராமிய பண்பாட்டு வாழ்க்கை சீர்கெட்ட நிலையைக்காட்டுகின்றது. களவுகொடுத்தல் சமூகத்தில் உற்ற கடும் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் காட்டுகின்றது, ஒட்டுமொத்தத்தில் கிராமிய பண்புகள் குன்றிப் போகும் நிலையை இவை தெளிவாக்குகின்றன.

எனவே எவரும் தனது உணவுக்கு உழைப்பது கட்டாயமாக வேண்டும். அவ்வழி உழைப்பு உத்தியோகமாக இருந்தாலும், கட்டாய உழைப்பு உடலுழைப்பாக இருக்கவேண்டும். வாழ்க்கைச் செலவு வந்த வழியே திரும்பிவிடும்.

கிராமிய அபிவிருத்தியின் இருகண்கள்: உடலுழைப்பு, சிக்கனவாழ்வு.

இவற்றை பாராளுமன்றத்தாலோ, அமைச்சர்களாலோ அரசியல் வாதிகளாலோ மட்டும் உற்பத்தி செய்துவிட முடியாது.

இன்று இக்கண்கள் மங்கலாய்விட்டன மீண்டும் ஒளி பரப்ப இன்றைய இளைஞர் உலகம் குதித்தெழ வேண்டும். உழவும் தொழிலும் பசுவும் கோழியும், போஷாக்குணவுதரும காய் கறி வளர்க்கும் வீட்டுத் தோட்டமும், பனையும், தென்னையும் தர்மத்தைப்போல் வீட்டில் தொடங்கட்டும்.

# யாழ். நகர பாதைகளில் வாகனங்கள் படும் பாடு!

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாகனங்களும், பாதசாரிகளும் படும்பாடு! சகிக்க முடியாதுள்ளது!

மநாகரசபை நிர்வாகிகள் பேரய்வரும் வாகனங்கள், சரடு முரடுகளுக்கென்றே தயாரான சக்கரங்களைக் கொண்டிருப்பதால் நமது நகரவீதிகளின் நிலை அவற்றுக்குப் பரவாயில்லைட் போலும்!

ஆனால் விமான ஓடுபாதை போல— அப்படியே இருக்கும் டோக்கியோ வீதிகளிலும், நியுயோர்க் வீதிகளிலும், லண்டன் வீதிகளிலும் ஓடிவிட்டு மெதுவான வேகத்தில் நமது வீதிகளில் ஓடலாமென்று வந்த 'டட்சன்களும்' 'பேஜோக்களும்', 'போட்டுகளும்' கராஜ்களில் கூறும் கதைகள் காது கொடுத்துக் கேட்க முடியாதவை!

காலிகே மலை, மலையாகக் கழிவுகள்!

இவற்றை அப்புறப்படுத்துவோரும் சில வேளைகளில் தாமதம் காட்டுகிறார்கள். அல்லது கடமையைச் செய்யப் புறப்பட்டால் குறிப்பிட்ட நேரத்தை அதற்கென்று ஒதுக்குகிறார்களில்லை!

இதனால் வேலைத்தளங்களுக்கும், நல்ல காரியங்களுக்கும், நோயாளிகளையும் கொண்டு செல்பவர்கள், வீதிகளில் குப்பை வாகனங்கள் நிறுத்தப்பட்டிருப்பதையும், அவற்றிலிருந்து கிளப்பிக்கொண்டிருக்கும் அசுத்தமான தூசுப் படலத்தையும் சகிசித்தவாறு பயணத்தைத் தொடர வேண்டியிருக்கிறது!

இந்நிலையில் கடந்தவாரம் ஒரு பத்திரிகையொன்றைக் கண்டெடுத்தேன். அதில் ''யாழ். மாநகரம் இலங்கையில் சுகாதாரம் மிக்கது'' என்று ஒருவர் பேசியிருந்தது கொட்டை எழுத்துக்களில் இருப்பதைக் கண்டேன்

யார் இந்தப்பேர்வழி? என்று எண்ணியவாறு உற்றுநோக்கினேன். திரு பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா வென்றிருந்தது! அந்தப் பத்திரிகை பல வருடங்களுக்குமுன் வெளியாகியிருந்தது. அப்போது அவர் மந்திரியாக இருந்தார்!

எனவே தெற்கில் இருப்பவர் ஒருவர் வர்ணிக்குமளவிற்கிருந்த நமது நகர், எப்போது மீண்டும் பொலிவுபெறும்? என்பதே யாழ்ப்பாணத்தவன் என்று கூறிக்கொள்ளும் எனது பெரும் ஆவல்!

இ. ரமணன்,
கொக்குவில்.

## மக்கள் கருத்து

இவ்வாறு அவை கூறுபனவற்றைக்கேட்டு ''இவற்றுக்கு இறுமாப்பு'' என்று பலர் சொல்லலாம்!

ஆனால் சகல வெளிநாட்டுக் கார்களுக்கும் சவால்விடக் கூடியவகையில்நம்மவரால் புதுயிர் அளிக்கப்பட்ட 'ஏ—40', 'சொமசெற்'போன்ற சிலஉன்னத நிலையில் உள்ளகார்களும் தமது வல்லமைக்கு யாழ்.வீதிகள் பின்வாங்குகின்றனவென்றே முறையிடுகின்றன!

இவைவிட்டுமல்ல, சைக்கிள் வண்டிகளும், பள்ளங்களில் பலதடவைகள் விழுந்துசெல்ல வேண்டியுள்ளதால் தமது இதயம்போல் இருக்கும் ரியூப்களில் துவாரங்கள் ஏற்படுவதை அடிக்கடி காட்டி வருகின்றன.

ஒருமாதத்துக்கு பலதடவைகள் 'ரியூப்களில்' ஏற்படும் துவாரங்களால் புதியனவற்றை வாங்க வேண்டியுளது!

வாகனங்களின் குறைகளை ஒருபக்கத்தில் வைத்துவிட்டு பாதசாரிகளின் நிலையைப் பார்ப்போம்!

எத்தகைய வாசனையைப் பூசிக்கொண்டு போனாலும். அந்த வாசனைகளை மாநகர சாக்கடைகள் மங்கிப்போகச் செய்கின்றன!

இவைமட்டுமல்ல குப்பைகளும் கூளங்களுமாக ஆங்...

## அமெரிக்க சுவாமிகளின் 56-வது பிறந்தநாள்



அமெரிக்காவில் உள்ள சைவசித்தாந்த திருச்சபையின் தலைவர் ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 56-வது ஜயந்தி விழா இன்று அளவெட்டி சிவலிங்க ஆலய வளவில் சிறப்பாகக் கொண்டாடப் படவிருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து சுமார் 40 சீடர்களுடன் வருகைதந்துள்ள சுவாமிகள் 10-ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு 14-ம் திகதி திருக்கேதீஸ்வரம் சென்று அடுத்த நாள் தலை கப்பல்மார்க்கமாகத் தமிழ்நாடு புறப்படுவார்.

### பருத்தித்துறையில்

## சுவாமி விவேகானந்தர் ஜயந்திவிழா இன்று

[புலோலி]

சுவாமி விவேகானந்தரின் 121வது ஜயந்திவிழா இன்று பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தின் 14வது ஆண்டுநிறைவு மலரை சுவாமிசித்ருபானந்தா தலைமையில் யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா வெளியிட்டு வைப்பார்.

மாலை திரு. வே. கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்திலே பருத்தித்துறை நகரமுதல்வர் சட்டத்தரணி எம். வேலுக் மயிலும் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வீ. கணேசலிங்கம் திரு. மு. பொ. வீரவாகு [ஜே பி], பட்டயக்கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவார்கள்

6ம், 7ம் திகதிகளில் மாலை சுவாமி விவேகானந்தரின் ஜீவிதம்பற்றி தொடர் விரிவுரையும் 8ம் திகதி தூய அன்னையின் ஜீவிதம் பற்றிய விரிவுரைகளும் இடம்பெறவுள்ளன. 9ம் திகதி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவிலே 'விவேகானந்தரும் சமயமும்' என்னும் பொருள்பற்றி காரைக்கிழார் (திரு. க. கந்தசாமி) விரிவுரை நிகழ்த்துவார்.

## என். சி. ஜி. ஈ. தகைமைக்கு அங்கீகாரம் இல்லையா

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தேசிய கல்விப் பொதுத்தராதரப்பத்திரப் பரீட்சை [என். சி ஜி ஈ.] முறையை தற்போதைய அரசாங்கம் ஒழித்தபோது அப்பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெற்றவர்களை க. பொ. த. [சாதாரண தர] பரீட்சைக்குச் சமமாகக் கருதலும்தே.க.பொ.த.பத்திரத்தை அங்கீகரிக்கப்பட்ட ஒரு கல்வித்தகைமையாகவும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் இணங்கியிருந்தது.

இதனால் 1983-ம் ஆண்டுக்கான லங்கா சித்த வைத்தியக் கல்லூரிக்கான அனுமதிக்கு விண்ணப்பித்தேன். அதற்குக் கல்லூரி நிர்வாகம் எனக்குரிய தே. க. பொ. த. பத்திரப்பரீட்சையை அங்கீகரிக்காது, கல்வித்தகைமை இல்லாமையால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இது யார் செய்த குற்றம்?

அரசாங்கத்திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் தனியார்துறையினரும் அங்கீகரித்துள்ள தேசிய கல்வித்தகைமையை யாழ் நகரில் உள்ள லங்கா சித்த வைத்தியக் கல்லூரியினர் மட்டும் அங்கீகரிக்காது இருப்பது மிக வருத்தத்துக்குரியது ஆகவே இக்குறையை நிவர்த்திப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவனசெய்து எமக்கும் விமோசனம் அளிப்பார்களா?

செல்வி அ. மாலா
622, மானிப்பாய் வீதி,
யாழ். நகர்.

# நிர்மலாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தனின் மனைவி திருமதி நிர்மலா நித்தியானந்தனை தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி அப்பீல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆட்கொணர்வு மனுவை திருமதி நிர்மலா நித்தியானந்தனின் தந்தை ஆழ்வாப்பிள்ளை இராஜரத்தினம் சார்பில் சட்டத்தரணி சி. வி. விவேகானந்தன் தாக்கல்செய்துள்ளார்.

தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுவில்பிரதிவாதிகளாக பாதுகாப்பு அமைச்சர் ரி. பி. வேரப்பிட்டியா, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரி. ஐ. வீரதுங்கா, பொலிஸ் மா அதிபர் ருத்திரா இராஜசிங்கம் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம்மனுவில், நிர்மலா நித்தியானந்தன் குற்றம் ஏதும் புரிந்திருப்பின் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்து குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யலாம். அப்படிச் செய்யாது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள உத்தரவு சட்டவிரோதமானது. ஆயுதப்படையினரால் சித்திரவதை செய்யப்படலாம் என மனுதார் அச்சப்படுவதாலும் நிர்மலா நித்தியானந்தன் ஆஸ்மா நோயாளியாக இருப்பதால் வைத்திய வசதி இல்லாது தற்போது இருப்பதால் அவருக்கு ஆபத்து விளைவிக்கலாம் என்று கருதுவதாலும் உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மனுதார் கோரியுள்ளார். (உ)

---

## பரு. பிரதேச சபைத் தலைவரின் வீட்டில்

# முகமூடியணிந்த துப்பாக்கி இளைஞரின் கொள்ளை முயற்சி!

(புலோலி)

தும்பளையிலுள்ள பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவரின் வீட்டில் முகமூடியணிந்த மூன்று துப்பாக்கி இளைஞர்களின் கொள்ளை முயற்சி பிரதேச சபைத் தலைவரின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டது கொள்ளையர் மின்னல்வேகத்தில் ஓடிமறைந்தனராம்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7-30மணியளவில் பருத்தித்துறை தும்பளை வீதியில் பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவரின் வீட்டிற்குள் முகமூடியணிந்து துப்பாக்கியுடன் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் யன்னலினூடாக துப்பாக்கியைக் காட்டி வீட்டுக் கதவைத் திறக்குமாறு பிரதேச சபைத்தலைவர் திரு. சி. மு. கந்தசாமியின் மனைவியைப் பயமுறுத்திய போது உட்புறத்திலிருந்த தமது கணவனிடம் ஓடிச்சென்று மனைவி கூறினார்.

பிரதேசபைத் தலைவர் கொள்ளையரின் பயமுறுத்தல்படி கதவைத் திறப்பதற்குச் செல்வதுபோன்று சென்று கதவு "பார்கம்பை" எடுத்து யன்னலினூடாக நீட்டப்பட்டிருந்த துப்பாக்கிக்கு ஓங்கியடிக்கவே துப்பாக்கி உடைந்தது உடைந்த துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு முகமூடியணிந்த துப்பாக்கிக் கொள்ளைக் கோஷ்டியினர் மின்னல்வேகத்தில் ஓடிமறைந்துவிட்டனர். இச் சம்பவம் பற்றிப் பருத்துத்துறைப் பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர்.

---

## கோகிலா மகேந்திரனின்

# 'மனித சொரூபங்கள்: ஒரு நோக்கு

புறச் சூழல் வர்ணனைகளிலும் பாத்திரமிகைப்படுத்தல்களிலும், வார்த்தை ஜாலங்களை காட்டாது சமூகப் பிரச்னைகள் உளவியல் ரீதியில் அணுகப்பட்டிருப்பது தொகுதியின் பன்னிரு கதைகளிலும் புரையோடிக் காணப்பட்டாலும்; முரண்பாடுகளின் அறுவடை, எல்லைகள், ஒரு பிணத்தின் தரிசனம், குரூரரசனைகள் போன்ற கதைகளேமெருகேறி மனதை நிறைக்கின்றன!

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஆசிரியை எழுதிய கதைகளின் வீச்சினில் பார்க்கும் போது சமூகப் பிரச்னைகட்குஉளவியல்ரீதியான அணுகல் கைகட்டிச் சேவகமாற்றும் பாங்கின் வளர்ச்சி எளிதில் புலனாகிறது!

தொகுதியின் கதைகள் என, வேறுபட்ட களங்களை எதிர்பார்க்கும் வாசகர்கட்கு ஐந்து கதைகளில் ஆசிரியையின் பழக்கப்பட்ட களங்களும் அடுத்தடுத்தே வருவது சலிப்பைத் (தான்) தருகிறது.

புளித்துப்போன சுரண்டல் போராட்டம், சாதி சீதனப் பிரச்னைகளைக் கதைகளில் புகுத்தி முற்போக்கானபாத்திரங்களை வலிந்து வரவழைத்துக் கதை பண்ணுது; ஏற்றத் தாழ்வுகளின் முரண்பாடுகள், அரசியலின் பேரால் ஏற்படும் ஏமாற்றுவித்தை, இலக்கியகாரனுக்கு ஏற்படும் வறுமை நோய், சாத்திர சம்பிரதாயமும் சமூகத்தில் அவற்றிற்கான ஆதிக்கமும் என்ற ரீதியில் சிந்தித்து செயலாற்ற முற்பட்ட கதாசிரியைக்கு முதலில் ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும்!

சமூகத்தில் மாறுதல்களை விரும்புபவர் தன் சொல்லுக்கும் செயலிற்கும் இடையில் மட்டும் அதனைக்காட்டிநிற்கும் போது 'ஒலிக்காது ஓலமிடும்' கதாசிரியையின் ஏக்கம், படிக்கும் வயதில் வசதி குறைவால் வேலை குமார்த்தப்படும் இளநெஞ்சங்களைக் கண்டு கொதித்தெழுந்தாலும் அது இந்தசமுதாய அமைப்புகளால் வெறுமனே இதயப் புண்களில் ஓர் வலியை மட்டும் ஏற்படுத்தி விட்டு ஏனோ மெல்லென மடிந்துவிடுகிறது! நேஞ்சான் குஞ்சு பரிதாபப் பார்வையில் நலைருகவே விழுந்துள்ளது.

சிதம்பரிச் சாதுரியின் சாத்திர சம்பிரதாய முரண்பாடுகள் 'பொருத்தங்கள்' கதையில் புலனாகிறது! ரியூஷன்கள் மூளைசாலிகளில் ஏற்படுத்தும் பாதிப்பை தனைக்கு உரித்தான ஆசிரிய நடையில் விளக்கி வைக்கிறார் 'உறுத்தல் வருடப்படுகிறது கதையில்! சமூகச் சிதைவுகளையும் அதற்குப் பலியாகும் மாணவ சமூகத்தையும் 'படம் பிடித்து' நாளைய உலகநாயகர்களை உருவாக்கியவர் 'கலைகின்ற வேஷங்கள்' என்றகதையில் வேஷமிட்டு வெளியல் திரியும் பள்ளி அதிபர்களின் முகமூடியை விலக்குகின்றார்.

மற்றும் 'அவன் ஏன் வாழ்கிறான்', 'மனிதசொரூபங்கள்' ஆகியவை தொகுப்பின் தலைப்பிற்குள் அடங்கி நின்றாலும், வெறுமனே கதைகளை ஒப்புவிக்காது சொல்ல வந்த கருவை மன திருத்தி கருவையே கருவிகளாக்கி கதையை நகர்த்தும் தன்மைகளை 'முரண்பாடுகளின் அறுவடை' போன்ற முற்சொன்ன நான்குகதைகளிலும் நன்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது!

தோட்ட உரிமையாளருக்கும் சம்பளகாரரிற்கும் உள்ள இடைவெளியே அவர்களின் அறுவடை முரண்பாடாக விளங்கும் "முரண்பாடுகளின் அறுவடை" கரு இலாவணியமாகவே கதையை நகர்த்துகிறது! களத்திற்கேற்ப பாத்திர வார்ப்புகள்! மாங்கண்டும் அந்தக் குறுக்குக்கட்டின கிழவியும் கதையின் வெற்றிக்கு வழிகோலுகின்றனர்! "உந்தக் கோதாரியோடை என்னத்துக்கு வேலைக்குவந்தனி எண்டு எனக்கெண்டால் விளங்கேல்லை" போன்றஉரையாடல்கள் பாத்திர வார்ப்புக்களை நாலுக்காக விளக்கி நிற்கின்றன!

நான்கு கதைகளின் இறுக்கம் நூல் முழுவதுமே விரவியிருந்திருப்பின் நல்லதோர் தொகுப்பு 'தனித்துவத்துடன்' நாட்டிற்குக் கிடைத்திருக்கும்!

ஆரம்பகால முயற்சியான வகையில் ஆசிரியைக்கு இதுஓர் மகத்தான வெற்றி ஆனபோதிலும் நூலின் அட்டைப் படத்தில் இன்னும் சற்று கவனம் செலுத்தியிருக்கலாம்.

இந்நூலை முக்கியமாக தரமான பெண் பிரமாக்கள் இலங்கையில் இல்லையே எனக் குறைப்பட்டுக் கொள்வோர் படித்துப் பார்க்க வேண்டும்!

புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்

---

# "சமுதாயத்துக்கு முதியோர் செய்த சேவைக்கு மதிப்பு"

[சித்தன்கேணி]

"முதியோர்கள் செய்த அரு பெரும் சேவைகளை கௌரவிக்கும்முகமாக முதியோர்தினவிழா நடைபெறுகின்றது. இளமைபருவத்தில் முதியோர்களாக இருப்போர் தம்மால் இயன்றவரை சமுதாயத்திற்கு செய்த சேவைகளுக்கு இன்றுதான் மதிப்புக் கிடைக்கிறது"

இவ்வாறு சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் வட்டுக் கிழக்கு கிராமோதய சபையினால் கொண்டாடப்பட்ட முதியோர்தினவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோம்பாய்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஆலாலசுந்தரம் கூறினார்,

வட்டுக் கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் சைவப் புலவர் திரு. நா, க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த முதியோர்தின விழாவில்சங்கரத்தை. துணைவி கலைநகர், சித்தன்கேணி பண்ணாகம், வட்டுக் கிழக்கு முதலான பல்வேறு இடங்களிலுமிருந்து சுமார் 60 வயதுக்கு மேற்பட்ட வயதான ஆண் பெண் வயோதிபர்கள் சுமார் 200 பேர் சமூகமளித்திருந்தனர்.

விழாவின் ஆரம்பத்தில் வட்டு லயன்ஸ் கழக தொழிற்சாலையிலிருந்து முதியோர்களுப் பிரமுகர்களும் மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக கூட்டமண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்

விழாவைசட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியமும், வட்டு. லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ விஜயரத்தினமும் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்கள்.

மில்க்வைற் தொழில் அதிபரும் சிவதர்மவள்ளலுமான திரு. க கனகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு முதியோர்களுக்கு உடை, உணவு, சவர்க்காரம் ஆகிய பொருட்களை வழங்கினார் அரசாங்க உதவிப்பணம் பெறும் சுமார் 150 முதியோர்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டது

சட்டத்தரணி சி. சிவபாக்கியநாதன், சமூகசேவை உத்தியோகத்தர் ஏ. இராமநாதன் கல்லூரி அதிபர் திரு க. அருணாசலம், ஆசிரியர் திரு ஆ. சதாசிவம் ஆகியோர் உட்பட இன்னும்பலர் உரையாற்றினர்கள் இறுதியில் விசேட சேவை உத்தியோகத்தர் வே. த. கதிர்காமநாதன் நன்றியுரை கூறினார்.

---

## ஆயுள்வேத வைத்தியசாலை

# அபிவிருத்திச்சபை

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டம் அண்மையில் வைத்தியசாலை அலுவலகத்தில் டாக்டர் ஜி பி. ஜி. பியதாச தலைமையில் நடைபெற்றது. எஸ், ரி. ஆர். அதிபர் திரு. எஸ். தியாகராசா அழகிய பலபடங்களை வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்தார்.

பின் திரு. தியாகராசா பேசும் போது, திரு. தம்பி ஐயா காசிநாதன் எடுத்திருக்கும் வைத்தியசாலை வளவில் கோயில்கட்டும் முயற்சியை ஆதரித்து அக்கோயிலை தனவந்தவர்களிடம் இருந்து பணம் சேர்த்து அழகிய முறையில் கட்டுவதற்கு முயற்சி எடுக்கலாம் என்றார். சபைக்கு தேவையான நிதியை பலவர்த்தகர்களிடம் இருந்தும் சேர்த்து அப்பணத்தை நிலையான வைப்பில் வைத்தால் அதில் இருந்து பெறும் வட்டிப் பணத்தை சபை நடவடிக்கைகளுக்கு செலவிட முடியும் என்றார். வைத்தியசாலை நூலகத்துக்கு தேவையான புத்தகங்களை, யாழ். நூலகத்தில் மேலதிகமாக இருக்கும் புத்தகங்களில் இருந்து பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

திரு. குருசாமி தன்னிடம் உள்ள நூல்களை வைத்தியசாலை நூலகத்துக்கு தருவதாக அறிவித்தார்.

நாடகவிழா ஒன்று நடத்தி அதன்மூலம் பெறும்பணத்தை வைத்தியசாலை அபிவிருத்திக்கு பயன்படுத்துவதெனவும் அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்பட்டது. வேறும் பலர் பேசினர். பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் ஜி.ஏ.ஜி பியதாச, உபதலைவர் திரு எஸ். தியாகராசா, செயலாளர் திரு எஸ் செல்லத்துரை, உப செயலாளர் திரு வி எஸ் துரைராசா பொருளாளர் திரு ரி சீனிவாசகம். போஷகர்கள்: திரு தேவநேசன் நேசையா யாழ்ப்பாணம் அரச அதிபர். திரு. என் நவரத்தினம் எம்.பி திரு எம். ஆலாலசுந்தரம் கோப்பாய் எம்பி, திரு. சடாட்சரம்.

---

# வெள்ளவாயா எப. பி. மீதான வழக்கு

(கொழும்பு)

வெள்ளவாய எம். பி. ஜே. எம். குமாரதாஸ இளம் பெண் ஒருவரை பலாத்காரம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் மத்துகம மாஜிஸ்திரேட் மன்றத்தில் எடுக்கப்பட்டது. குமாரதாஸ எம். பி யின் சார்பில் சட்டத்தரணிகள் எட்லி பெரேரா, சுதந்த ஜயசிங்கா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்

வெள்ளவாயா வாடிவீட்டில் வைத்து 1980 ஜனவரி 22-ந் திகதி திரு குமாரதாஸவும் அவரது பிரத்தியேக செயலாளர் சுடத் சிறிசேனவும் இளம்பெண் ஒருவரை பலாத்காரம் செய்ததாக மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இவ்வழக்கினை மத்துகம மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது திரு. குமாரதாஸ தரப்பு சட்டத்தரணி 'இது பொய்யான முறையீடு' என்று தெரிவித்துள்ளார்.

---

# வெளிநாட்டு துணிவகை பிடிபட்டது

(மாவிட்டபுரம்)

வல்வெட்டித்துறையில் வீடு ஒன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 4 லட்சம் ரூபாய் பெறுமதியான 34 கட்டு வெளிநாட்டுத் துணிவகைகளை சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

இத்துணி வகைகள் இந்தியாவுக்குக் கடத்துவதற்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படுகின்றது இப்பொருட்கள் யாழ்ப்பாணம் சுங்ககலெக்டர் முன் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைகள் தொடர்கின்றன.

---

# நடவடிக்கை

(மன்னார்)

தலைமன்னார் பகுதியிலுள்ள இறைச்சிக் கடைகளில் இறைச்சி வகைகளை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தலைமன்னார் கிராமோதய சபைத் தலைவர் திரு. அல்பிறட் சில்வா அனுப்பி வைத்துள்ளார்.

---

# விசேட சந்தை

(மன்னார்)

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மன்னார் வார இறுதிச் சந்தையில் கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் விசேட சந்தை நடத்தப்பட்டது,

இவ் விசேட சந்தையைநடத்துவதற்கான அனுமதியை மன்னார்மாவட்ட அபிவிருத்தி சபை வழங்கியிருந்தது.

பிறேமன் கொலை வழக்கு:

# 1-ம், 2-ம் எதிரிகள் தலா 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதி!

(யாழ்ப்பாணம்)

'பிரேமன்' கொலை வழக்கில் 1ம், 2ம் எதிரிகள் தலா 5,000 ரூபா பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி திரு ஜே ஜி ஆசீர்வாதம் அனுமதித்தார்.

இவ்வழக்கில் 81 நவம்பர் 1ம் தேதி நடேசு யோகராஜ் அல்லது போயா, வேலுப்பிள்ளை கந்தசாமி அல்லது வெள்ளையன், சுப்பிரமணியம் விஜயரத்தினம் அல்லது விஜயன் ஆகியோர் ஆரியகுளத்தைச் சேர்ந்த பிரேமனை வாளால் வெட்டி கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

3ம் எதிரியாகிய சுப்பிரமணியம் விஜயராஜ் அல்லது விஜயன் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நடந்த விசாரணை முடிவில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

யாழ் நீதவான் திரு. ரி. ஜோகநாதன், 3 எதிரிகளையும் மேல்நீதிமன்ற விசாரணைக்கு பாரப்படுத்தினார். அப்போது 1ம், 2ம் எதிரிகள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு 3ம்எதிரி மட்டும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் 1ம், 2ம் எதிரிகளின் பிணைமனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிரிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர் பி. சபாரத்தினம், இரு எதிரிகளும், ஏறக்குறைய 11 மாதங்கள் ரிமாண்டில் இருக்கிறார்களென்றும் நீதவான் நீதிமன்ற விசாரணை முடிந்துவிட்டதென்றும், 3ம் எதிரி முன்பு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டாரென்றும், இதுவரை இந்த எதிரிகள், இந்த வழக்கில் சாட்சிகள் எவருடனும் தொடர்பு கொண்டதாகவோ, பயமுறுத்தியதாகவோ எதுவித முறைப்பாடுமில்லையென்றும் கூறினார் இந்த சமர்ப்பணங்களைத் தொடர்ந்து 1ம், 2ம் எதிரிகளை பிணையில் செல்ல அனுமதித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர்.பி சபாரத்தினம், சட்டத்தரணி ரி லிங்கராசா, சட்டத்தரணி ரி. தனராஜசிங்கம் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானர் அரச தரப்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சிறீமகேந்திரராஜா ஆஜரானர். (க)

# மன்னார் நவீன பஸ்நிலைய வேலைகள் பூர்த்தியாகின்றன

(மன்னார்)

மன்னாரில் ஆறு லட்சம் ரூபா செலவில் நிறுவவென திட்டமிடப்பட்ட நவீன பஸ் நிலைய வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு இ போது பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ளது.

இப்புதிய பஸ் நிலையத்தின் முதல் கட்டவேலைகளை மேற்கொள்ளவெனபோக்குவரத்து அமைச்சினால் ஒன்றரை லட்சம் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

இந்நிதியில் புதிய பஸ்நிலையத்திற்கான வீதி அமைக்கப்பட்டு பஸ்தரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுவருகிறது.

மன்னார் பஸ் நிலையத்தின் முதல்கட்ட வேலைகள் இம்மாதம் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மன்னாரில் தற்பொழுதுள்ள பஸ்நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பஸ் தரிப்பு நிலையங்கள் அகற்றப்பட்டுவருகிறது.

இதனால்சங்குப்பிட்டி, விடத்தல்தீவு, தலைமன்னார், எருக்கலம்பிட்டி, பேசாலை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் வெயிலில் நின்றே தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

# யாழ்., முல்லைத்தீவில் கைத்தொழில் அபிவிருத்தி

## தொண்டமான் நடவடிக்கை

[புலோலி]

யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மாவட்டங்களில்கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. சௌ தொண்டமான் மேற்கொண்டு வருகிறார்.

அமைச்சர் தொடண்டமானின் பணிப்பைத்தொடர்ந்து யாழ். முல்லைத்தீவு மாவட்டங்களில் கைத்தொழிற்சாலைகளும், கைத்தொழிற் பயிற்சி நிலையங்களும் இம்மாத இறுதிக்குள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உடுப்பிட்டித்தொகுதியிலுள்ள கரவெட்டியில் சித்திரக்கைப்பணி நிலையத்தையும் கோப்பாய் தொகுதியிலுள்ள அச்சுவேலியில் 5 இலட்சம் ரூபாசெலவில் இலகுபொறியியல் நிலயத்தையும் முல்லைத்தீவில் பனந்தும்புத் தொழிற்சாலையையும் பனை ஓலை மூலப்பொருள் மாட்டுத்தீவன உற்பத்தித் தொழிற்சாலை யொன்றையும் அமைச்சர் தொண்டமான் திறந்து வைக்கவுள்ளார்.

பனைவள அபிவிருத்திசம்பந்தமான தொழிற்சாலைகளை இப்பகுதிகளில் அமைத்துத்தர வேண்டுமென்று பனம்பொருள் அபிவிருத்திசபைத் தலைவர் திரு க. நடராசா கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்ச திரு. தொண்டமானிடம் ஏற்கனவே கோரியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வெளியீட்டுவிழா

(அரியாலை)

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூகநிலையத்தின் கையெழுத்து வெளியீடான "அறிவொளிக்கலை" வெளியீடு வரும் 14ம் திகதி பொங்கல் வெளியீடாக வெளிவரவிருக்கிறது.

பொங்கல் தினத்தன்று நடைபெறும் வெளியீட்டுவிழாவிற்கு நிலயத் தலைவர் திரு. திருநாவுக்கரசு தலைமை வகிப்பார். இவ்வெளியீட்டில் வெளிவரும் முதல்தரமான மூன்று சிறு கதைகளுக்கு பரிசுகள் அளிக்கப்படவிருக்கின்றன.

"தமிழ் பேசும்மக்கள்

# விடுதலைக்குறிக்கோளை இறுகப்பிடிக்க வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"நடந்து முடிந்த கருத்துக் கணிப்புவாக்கெடுப் பின்போது தமிழ் இலங்கை மக்கள் மீண்டும் தமது நிலையைநன்கு தெளிவுபடுத் தியுள்ளனர். தமிழ் இலங்கை மக்கள் விரும்பாமலும் ஏற்றுக்கொள்ளாமலும் இருந்து கூட அவர்கள் வேற்று மக்களின் வாக்குப் பலத்தினுல் ஆட்சிக்குக் கட்டுப்படப்போகிறார்கள்"

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு செ. கோடீஸ்வரன் சர்வஜன வாக்கெடுப்பு முடிவு தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தமது சலப புத்தியைக் காட்டிக்கொண்டிருப்பதாலும், மக்களின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் ஜனதிபதிக்கு இசைவானவர்களே இனிப்பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவார்கள் என்பதாலும் மக்களின் பொறுப்பு மிக பாரியதாய் விட்டது என்பதை தமிழர் சுயாட்சிக்கழகம் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளது.

1956ம் ஆண்டிலிருந்து தமிழ் இலங்கைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்ற உண்மை என்னவெனில் தமிழ் இலங்கையும் தமிழ் இலங்கை மக்களும் அவர்களின் விருப்பத்திற்கு முழுமாறுக சிங்கள மக்களின் வாக்குப் பலத்தினுல் ஆட்சிபீடம் ஏறுவோரின் ஆளுகைக்குட்பட்டு வருகிறார்கள் என்பதாகும்.

"இந்நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது விடுதலைக்கான குறிக்கோளை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வதுடன் எவ்வகையிலும் அரசு தனது பலத்தைப் பெருக்கி ஒத்துப்போகாத எதிரணியிலேயே தமிழ்மக்கள் பணியாற்ற வேண்டும்"

[வண். நிரு.]

# தொழிலாளர் முகாமைத்துவம்:

## சர்வதேச கருத்தரங்கு

புதுடில்லி ஜன 4

'3வது உலக நாடுகளின் அபிவிருத்தியில் தொழிலாளர் முகாமைத்துவத்தின் பங்களிப்பின் அளவு' என்பது பற்றிய 15 நாடுகள் பங்குபற்றும் நாலு நாள் கருத்தரங்கு இன்று புடில்லியில் ஆரம்பமாகிறது.

கருத்தரங்கை பாரதப் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவி கலாநிதி மதுருஜா ஆரம்பித்து வைப்பார். இக் கருத்தரங்கில் 200 பிரதிநிதிகளும் 40 நிபுணர்களும் கலந்து கொள்கின்றனர். தொழில் உறவுகள், தொழிற்சங்கம், தொழில் நலன்கள், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் கருத்தரங்கின் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

டில்லிப் பல்கலைக்கழகமும், சர்வதேச தொழிற்சங்க நிறுவகமும், பாரத தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து நடாத்தும் இக்கருத்தரங்கில் பாரதம் இலங்கை உட்பட தென்கிழக்காசியப் பிராந்திய நாடுகள் பங்குகொள்ளுகின்றன. (உ)

துறைமுக தொழிலாளருக்கு

# ஊக்குவிப்புபணம் வழங்குவதில் பாகுபாடு

## ஜனதிபதியிடம் புகார்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் நிலக்கரி இறக்கும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்குவதில் பாகுபாடுகள் காட்டப்படுவதாக ஜனதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை புதிய துறைமுகத்திற்குசீமந்துஆலைக்கான நிலக்கரியுடன் வரும் கப்பல்களிலிருந்து நிலக்கரி இறக்கும் வேலைகளில் லங்கா சீமந்து லிமிட்டெட்டின் தொழிலாளர்கள் ஈடுபட்டுவந்தனர்.

நிலக்கரிக் கப்பல் வந்ததும் புதிய துறைமுக அபிவிருத்திப் பகுதியில் கடமை புரியும் சகலதர தொழிலாளர்களும் ஈடுபட்டு நிலக்கரியை துரிதமாக இறக்குவதில் ஈடுபடுகின்றபோதும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினருக்கே ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படுவதாக தெரிவிக்கும் தொழிலாளர்கள் இவ்வேலையில் ஈடுபடும் சகல தர ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புப்பணம் வழங்க வேண்டுமெனவும், அதற்கு ஆவனசெய்யுமாறும் ஜனதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சர்வதேச இஸ்லாமிய நீதிமன்ற ஆணைக்குழு கூடுகிறது

றியாத், ஜன. 4

சர்வதேச இஸ்லாமிய நீதிமன்றம் நிறுவும் இஸ்லாமிய நாடுகளைச்சேர்ந்த நீதிபதிகளின் குழு இன்று சவூதி அரேபியாவில் கூடுகின்றனர்.

சர்வதேச நீதிமன்றத்துக்குச் சமமான சர்வதேச இஸ்லாமிய நீதிமன்றம் அமைக்கும் அரபு நாடுகளின் ஆணைக்குழுவினரின் உத்தியோக பூர்வமான கூட்டம் இன்று சவூதி அரேபியாவின் தலைநகரில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் நீதிமன்றத்தின் அமைவிடம் அமைப்பு ஆகிய நிர்மாண வேலைத்திட்டங்களும் நீதிமன்றத்தின் செயல்திட்டங்களும் ஆராயப்படவுள்ளது. [உ]

# தீர்மானம்

(மன்னார்)

"தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமாரையும், இளைஞர்களையும், விரிவுரையாளர்களையும் உடன்விடுதலை செய்யவும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும், அவசரகாலச்சட்டத்தையும் நீக்கவும்."

இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்று மனை கோவற்குளம் இந்து இளைஞர் மன்றக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. [ப]


உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

* வர்த்தக, விவசாய உபகரண வாடகை கொள்வனவு உதவி
* விவசாயம்,கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
* நீங்கள் விற்கவிருக்கும் காணி, வீடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
* ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் -- உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும்

பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்

தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

யாழ்ப்பாணம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி.ஞாயிறு 2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் — சரிதா
மௌனகீதங்கள்
(மக்கள் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயா
திருடி

இன்னும் சில தினங்களில்
றீகல் (யாழ். நகர்)
நான் (ஈஸ்ட்மன் கலர்)
விரைவில்
எங்கவீட்டுப்பிள்ளை

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — அஞ்சலிதேவி
மாதர்குல மாணிக்கம்
(புதிய பிரதி)

சாந்தி யாழ். 3—6-1-83வரை
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
NIGHT WING
IN THE DEAD OF NIGHT THEY COME...
SWIFT—SILENT—SAVAGE
An Action Thriller—Color

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜெயலலிதா
சவாலேசமாளி

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது. இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
சிவாஜி வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

# விலைக்கு வாங்கிய பசுவுக்கு நேர்ந்த கதி!

(கிளிநொச்சி)

மாடு ஒன்றை தரகர் ஒருவரின் உதவியுடன் விலைக்கு வாங்கி ஒருவரின் பாதுகாப்பில் ஒப்படைத்து விட்டு நள்ளிரவுவேளை யாருக்கும் தெரியாமல் தரகருடன் சேர்ந்து அம் மாட்டையே திருடி மாட்டின் இறைச்சியைத் தரகருடனும் நண்பர் ஒருவருடனும் பங்குபோட்டதாகக் கூறப்படும் நபரும் தரகரும் கிளிநொச்சி பொலிசாரிடம் சிக்கியுள்ளனர்.

இந்தத் திருட்டுச்சம்பவம் கிளிநொச்சி திருநகரில் நடைபெற்றது. சாரீப் என்பவரிடம் திருநகரைச் சேர்ந்த கிட்ணபிள்ளை நடராசா என்பவர் மாட்டுத் தரகர் வேலுப்பிள்ளை மூர்த்தி என்பவரின் உதவியுடன் பசுமாடொன்றை விலைக்கு வாங்கி இரவானதால் மாட்டை தனது வீட்டிற்கு கொண்டுசெல்லமுடியாதெனக்கூறி க. துரைசிங்கம் என்பவரின் வீட்டில் மாட்டைக் கட்டிவிட்டு நள்ளிரவுவேளை துரைசிங்கம் வீட்டார் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது தரகருடன் வந்த நடராசா அம் மாட்டைத் திருடி இரவோடிரவாக இறைச்சியாக்கி இன்னுமொரு நபருடன் சேர்ந்து பங்கிட்டுவிட்டு காலையில் தனது மாட்டை துரைசிங்கம் திருடிவிட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்ததாகக் கூறப்பட்டது.

நடராசாவும் தரகரும் கிளிநொச்சி பொலிசார் முன் திரு பொன்னம்பலத்தின் தலைமையிலான பொலிஸ் புலன்விசாரணையின்போது சிக்கினார்கள்.

சந்தேகத்தின்பேரில் நடராசாவும் தரகர் மூர்த்தியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்ந்து இத் திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவர் தலைமறைவாகியுள்ளார். (க)

## பொத்துவிலில் நடந்த மீலாத்விழா

(யாழ்ப்பாணம்)

பொத்துவிலில் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த மீலாத்விழா அக்குர் ஆன் மதுரஸா மாணவ, மாணவிகளது அணிவகுப்பு முஸ்லிம் வாலிபர்கள் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, ஒரு மைல் நீள ஊர்வலத்தோடு ஆரம்பமாகியது. மாணவ மாணவிகளது பேச்சு, கிறுவுத், இஸ்லாமிய கீதம். அதான், முஸ்லிம் கலாச்சார அம்சங்களான கோலாட்டம், பக்கீர் பைத் முதலான போட்டிகளும் விழாவின் முக்கிய அம்சங்களாகத் திகழ்ந்தன.

நபிகளாரின் நன்னாளைக் கௌரவிக்குமுகமாக இருவர்களைப் பாராட்டும் நிகழ்ச்சி, முதியோர்களைக் கனம்பண்ணுதல் என்பனவும் மூன்று ஆண்களையும், இரண்டு பெண்களையும் இஸ்லாத்தின்பால் சேர்த்துக்கொள்ளும் நிகழ்ச்சியும் பிரஸ்தாபவிழாவில் மகுடம் தாங்கி நிற்கின்றன.

நபிகளார் பிறந்ததினம் நாடெங்கிலும் கௌரவிக்கப்படுதல் நம் சமூக கலாச்சாரமாகும் என்பதற்காகவே வங்கி – பொது – வர்த்தக விடுமுறை நாளாக இந்நாட்டின் வரலாற்றில் பிரகடனப்படுத்தப்பட்ட விழாவின் ஆரம்பத்தில் நன்றிதெரிவிக்கப்பட்டது. இவ் விழா ஸ்ரீலங்கா முஸ்லிம் மஜ்லிஸ் ஸ்தாபகர் செய்யிதே மௌலானா தலைமையில் நடைபெற்றது.

வள்ளளார் வாழ்வுபற்றி கவிஞர் சாந்தி முகைதீன் சாத்தான்குடி மீரா முகைதீன், மௌலவி சலாகிதீன் ஏ. எம். ஏ ஹக்கீம், பீ டீ. நிலாவுதீன் ஆகியோர் சிறப்புரை வழங்கியதோடு போட்டியாளர்களுக்கும் பெறுமதி வாய்ந்த வெகுமதிகள் வழங்கப்பட்டன.

இவ்விழா பொத்துவில் ஐதுரூஸ் மௌலானா மதுரஸா, ஸ்ரீலங்கா முஸ்லிம் மஜ்லிஸ் ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

## தங்கதுரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கியதை நீர்பார்த்திரா?

சாட்சி: இல்லை-எப்போதும் காணவில்லை,

சுனில், ஆனையிறவு ராணுவ முகாமிலும், உமது முன்னிலையில் தாம் பலதடவை தாக்கப்பட்டதாக முதலாம் எதிரி இங்கு கூறியுள்ளார்.

சாட்சி: இல்லை—அவர் அப்படித் தாக்கப்படவில்லை.

சுனில்: பலாலிகொடை ராணுவ முகாமிலும் ஆனையிறவு ராணுவமுகாமிலும் எப்போதாவது முதலாம் எதிரி தலைகீழாகக் கட்டித்தொங்கவிடப்பட்டிருந்ததை—நீர்கண்டீரா? அவரது கண்ணிலும், ஆண் உறுப்பிலும் மிளகாய்த்தூள் பூசப்பட்டதை நீர் கண்டீரா?

சாட்சி: இல்லை — எப்போதும் காணவில்லை.

சுனில்: இரண்டாம் எதிரியான குட்டிமணி தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருந்ததை நீர் எப்போதாவது கண்டீரா?

சாட்சி: இல்லை

[வழக்கு விசாரணை தொடர்ந்து நடக்கிறது] [இ]

# மன்னார் செய்திகள்

— நமது நிருபர் எஸ். தர்மகுலசிங்கம் —

### புலமைப்பரிசில்

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் 22ம் திகதி மன்னார் திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

இவ்வைபவத்தின் போது மன்னார் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு தலா 300ரூபா வீதம்புலமைப் பரிசில் வழங்கப்படும்.

இத்துடன் கலை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், வர்த்தகம் ஆகிய துறைகளில் திறமை சித்தி பெற்ற 5 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் ஐயாயிரம் ரூபா உதவிப்பணமாக வழங்கப்படும்

### நீர்ப்பாசன வசதி

முசலிப்பகுதிவிவசாயிகளின் நலன் கருதி கலாறு-மாவில் நீர்ப்பாசனத்திட்டம் பல லட்சம் ரூபா செலவில் செயல்படுத்தப்படும் இதற்கான ஆய்வுவேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டம் கலாற்றை மறித்து மாவில் புராதன வாய்க்கால் மூலம் பாசன வசதி யளிக்கும் மிகப்பெரிய திட்டமாகும்.

இத்திட்டம் பூர்த்தியானதும் முசலிப்பகுதியைச்சேர்ந்த சகல விவசாயிகளுக்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

### மாணிக்கவாசகர் சிலை அன்பளிப்பு

மன்னார் சித்திவிநாயகர்ஆலயத்திற்கு மாணிக்கவாசகர் சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

திருவாதிரை பூஜாரம்ப வைபவத்தை முன்னிட்டு இச் சிலையை பிரபல வர்த்தகர் திரு. கே. எம். குலசிங்கம் ஆலய பூசகரிடம் கையளித்தார்

### வங்கிக்கிளை ஆரம்பம்

மன்னாரில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிஸ்கோவங்கிக்கிளை விரைவில் திறந்து வைக்கப்படும்.

மன்னார் மாவட்ட இளைஞர் மன்ற அதிகாரி ஏ. சி. ஏ. கபூர் ஈழநாடு நிருபரிடம் இதைத் தெரிவித்தார்

### கையெழுத்துப் பத்திரிகை

எருக்கலம்பிட்டி ஸ்ரார்லைற் கழகத்தினால் இம்மாத இறுதியில் நட்சத்திர ஒளி என்னும் கையெழுத்துப்பத்திரிகை ஒன்று வெளியிடப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை பத்திரிகை ஆசிரியர் ஜனாப் எம். எஸ். மூசின் மேற்கொண்டுள்ளார்.

### கூட்டணி உறுப்பினர் வேண்டுகோள்

"மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையில் ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்களைச்சந்தித்து எருக்கலம் பிட்டி குடிநீர் விநியோகத்திற்கான நீர்வரியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

இவ்வாறு வியாழக்கிழமை நடைபெற்ற மன்னார்மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில்தமிழர்விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் ஐ. தே. கட்சி உறுப்பினர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

### மூவாயிரம் ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தில் சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட முதியோர் தினவிழாவுக்கென மன்னார்மாவட்ட அபிவிருத்திசபை 3ஆயிரம் ரூபா ஒதுக்கீடுசெய்துள்ளது"

இவ்வாறு அபிவிருத்திசபை தலைவர் திரு பி. எம். செபமாலை தெரிவித்துள்ளார்.

### கருத்தரங்கு

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான உணவு போஷாக்குத் தொடர்பான கருத்தரங்கு ஒன்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரட்ணம், திட்டமிடல் அதிகாரி திரு. ரி.இராசநாயகம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

### மின் தட்டுப்பாடு

மன்னார் பட்டினத்தில் விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் சக்தி போதாததால் மின் உலர்த்தி, வீடியோ என்பவற்றை இயக்கமுடியவில்லை. மாலை 6மணிக்குப் பின் ரியூப் லைற்கூட எரிவதில்லையென மன்னார் பட்டின மின்பாவனையாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

### 50 ரூபா சம்பள உயர்வு

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகங்களில் கடமையாற்றும் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இம்மாதம் முதல் பிரதி மாதமும் 50 ரூபா மேலதிகப்படியாக வழங்கப்படும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### கோரிக்கை

"தலைமன்னார் பகுதியில் பாடசாலைகளில் உதவிபெற்று கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை தலைமன்னார் கிராமோதய சபைத் தலைவர் திரு. திரு அல்பிறட்சில்வா மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசனுக்கு அனுப்பிவைத்துள்ளார். (ப)

## இன்று கெஞ்சிற் கச்சேரி

[யாழ்ப்பாணம்]

யாழ். நுண்கலைமன்றம் அளிக்கும் கெஞ்சிற் கச்சேரி இன்று மாலை யாழ் றிம்மர் மண்டபத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்ச்சியில் ஆண்டான்கோவில் ஏ. வி. செல்வரத்தினம் நாதஸ்வரமும், ஆர். ராதாகிருஷ்ணன் வயலினும் ஏ. சந்தானக்கிருஷ்ணன் மிருதங்கமும், கே. கணேசன் கஞ்சிராவும், என். குமரகுரு தவிலும் வாசிப்பர்.

## மட்டுவில் சந்திரன் மரணவிசாரணை:

# "என்ன இங்கே நிற்கிறுய்? எனக்கூறி கிறிஸ்கத்தியால் குத்தினுர்"

### கனகம்மா சாட்சியம்

[மட்டுவில்]

"என்ன இங்கே நிற்கிறுய்? என்று கேட்டபடி சந்தேக நபர் ஒருகிறிஸ்கத்தியை மடியிலிருந்து எடுத்து இறந்தவரின் பழுவில் குத்தினுர். இரத்தம் பீறிட்டு பெருகியது. 'ஐயோ என்னைப்பிடியுங்கள்' என்று கூறியபடி சோர்ந்து முகங்குப்புற இரத்த வெள்ளத்தில் சந்திரன் கீழ விழுந்தார்".

மட்டுவில் தாமோதரம் பிள்ளை சந்திரசேகரத்தின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த பொன்னம்பலம் கைம்பெண் கனகம்மா மேற்கண்டவாறு கூறினுர்.

பருத்தித்துறை இலங்கை வங்கி லிகிதரான சந்திரன் என்று அழைக்கப்படும் தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் என்ற 32வயது நபர் மட்டுவில் மகாவித்தியாலய சந்தியில் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானுர்.

மட்டுவில் வாசியான இறந்தவர் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் லிகிதராகக் கடமையாற்றினுர். பின் அவர் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளைக்கு மாற்றப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் வல்வெட்டித்துறை கம்பர் மலையில் தனது மனைவியின் வீட்டில் வசித்து வந்தார். இவர் புதுவருட தினத்தன்று காலை கம்பர் மலையிலிருந்து மட்டுவிலுக்கு தனது பெற்றேர் வீட்டுக்கு வரும் போதே மட்டுவில் மகாவித்தியாலய சந்தியில் இச்சம்பவம் நடைபெற்றது.

சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

சாவகச்சேரி பதில் மாவட்ட நீதவான் திரு சி பாலகிருஷ்ணன் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினுர்.

சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன் திரு. சின்னையா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

பதில் நீதவான் முன்னிலையில் பொன்னம்பலம் கனகம்மா தொடர்ந்து சாட்சியத்தில் கூறியதாவது:-

சம்பவதினம் காலை நான் மட்டுவில் மகாவித்தியாலயசந்திக்கருகில் உள்ள தருமலிங்கம் கடைக்குச் சென்று கொண்டிருந்தேன். நான் சந்திக்குவந்து விட்டேன் அப்பொழுது இறந்தவரான சந்திரன் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். அவர் என்னைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிறுத்தி என்னுடன் கதைத்தார் அவர் என்னுடைய உறவினர்.

அப்பொழுது சந்தேகநபர் அங்கு வந்தார். சந்திரனைப் பார்த்து நீ இங்கே என்ன செய்கிறுய் என்று கேட்டார், அதற்கு சந்திரன் நான் இவவுடன் கதைக்கிறேன் என்று கூறிவிட்டு, தொடர்ந்து என்னுடன் கதைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சந்தேகநபர் மடிக்குள்ளிருந்த கிறிஸகத்தியை எடுத்து சந்திரனின் இடதுபழுவில் குத்தினுர். உடனே சந்திரன் சோர்ந்த நிலையில் 'ஐயோ என்னைப் பிடியுங்கள்' என்று கத்தியபடி கீழ வீழ்ந்தார் அவர் முகங்குப்புற இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தார். நான் ஐயோ குத்திப்போட்டான்ஓடிவாருங்கோ என்று குளறினேன். அருகில் நின்ற நடராஜா ஸ்ரீகாந்தனை ஓடிப்போய் சந்திரனின பெற்றேருக்கு அறிவிக்கும்படி கூறினேன்.

நான் கத்தியதும் சந்தேக நபர் குத்திய கத்தியை இழுத்துக்கொண்டு வீதியின் வடக்குப்பக்கமாக சரசாலையை நோக்கி ஓடினுர். நான் சந்திரனைத் தூக்கியபடி மீண்டும் குளறினேன். சந்திரனின் வீட்டிலிருந்து ஆட்கள் வரவும், தருமலிங்கத்தின் கார் வரவும் சரியாக இருந்தது. காரில் ஏற்றி சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ருேம். அங்கு டாக்டர் பரிசோதனை செய்துவிட்டு சந்திரன் இறந்துவிட்டதாகக் கூறினுர்.

இறந்த சந்திரனுக்கும் சந்தேகநபருக்கும் பழைய பகை இருந்தது.

நடராஜா ஸ்ரீகாந்தன், திரு. சின்னையா ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணை முடிவில் கொலையெனத் தீர்ப்பளிக்க பட்டது.

மோட்டார் சைக்கிள், தலைக்கவசம், கூலிங்கிளாஸ், ஒரு சோடி செருப்பு ஆகியவற்றையும் பொலிசார் சான்றுப் பொருட்களாக எடுத்துக் கொண்டனர்.

சாவகச்சேரி பொலிஸ்நிலைய அதிபர் திரு.கே.எம். ஏ. தென்னக்கோன், யாழ்ப்பாணம் ஏ. எஸ். பி. ஆகியோரும் ஸ்தலத்திற்கு வந்து பார்வையிட்டனர்.

சாவகச்சேரிப் பொலிசார் இக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கல்வயலைச் சேர்ந்த செல்லப்பா சிவபாதம் என்ற இளைஞரைத் தேடிவருகின்றனர். [க]

## ரூ 75 ஆயிரம்..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

இப்பொருட்களும் 64 ஆயிரம் ரூபா பெறுமதியான வல்ளமும காங்கேசன்துறை சுங்க இலாகாவில் ஒப்படைக்கப்பட்டு எவரும் உரிமைகோராததால் பறிமுதல் செய்யப்பட்டது.

வள்ளத்தில் இப்பொருட்களைக் கடத்தி வந்தவர்கள் இராணுவத்தைக் கண்டதும் அதனை அவ்விடத்திலேயே விட்டுத் தப்பிஓடிவிட்டார்களாம்.

## மெட்றிக் அளவைகள் சட்ட மூலம் நிறைவேறியது

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் கூடியபோது முக்கியமான பல மசோதாக்கள் அங்கீகரிக்கப்பட்டன,

வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மெட்றிக் அளவைகள் திருத்த சட்டமூலத்தையும், புலமைச் சொத்து திருத்த சட்டமூலத்தையும் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிஞர்.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ் தொண்டமான் மேய்ச்சல் நிலங்கள் அபிவிருத்தி சட்டமூலத்தையும் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினுர்.

இவைகள் உட்பட பல மசோதாக்கள் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. (வெ)

கிரிக்கெட் டெஸ்ட்:

## இந். 372 பாக். 3-255

இஸ்லாமாபாத் ஜன. 4

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்று வரும் மூன்ருவது கிரிக்கெட டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்றைய தினம் பாரதக் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 372 ஒட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கட்டுக்களை நஷ்டத்திற்கு 255 ஒட்டங்களை எடுத்துள்ளது. (வெ)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கருணுநிதி (வெள்ளை)

ஆறுமுகம் கருணுநிதி காலமானுர். பூதவுடல் 344/6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து 5-1-83 (இன்று புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

5731

## மரண அறிவித்தல்

### அருணுசலம் கந்தையா

சாவகச்சேரி நுணுவில் கிழக்கைச்சேர்ந்த இளைப்பாறிய யாழ்ப்பாணம் நூதனசாலை அதிபர் அருணுசலம் கந்தையா காலமானுர். இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை திருமதி இராஜபூபதியின் அன்புக்கணவரும், திருமதி சுகந்தி, திருமதி ரஞ்சினி, தேவேந்திரா ஸ்ரீகாந்தா (பொறியியலாளர் U.N.O MOZAMBIC, திருமதி கலாயினி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ஜெகநாதன் (பொறியியலாளர்-U.K), நாகேஸ்வரன் தொழில் நுட்ப உதவியாளர்-பெருந்தெருக்கள் திணைக்களம் பூநகரி), திருமதி ஜீவமதி, ஜெயக்குமார் (யாழ்-பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார் அன்னரின் பூதவுடல் (இன்று 5-1-83 புதன்கிழமை பி. ப. 4-00மணிக்கு கந்தபதி நுணுவில் கிழக்கு சாவகச்சேரி இல்லத்திலிருந்து சாவகச்சேரி கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5734


கடத்தல் பொருட்களுடன்

# இந்திய இழுவைப் படகு பறிமுதல்!

[மன்னுர்]

இலங்கைக்கு கடத்தல் பொருட்களை ஏற்றிவந்த பல்லாயிரம் ரூபா பெறுமதியான இந்திய இழுவைப் படகு மன்னுர் சுங்க அதிகாரியினுல் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்விழுவைப் படகில் வந்த 5 இந்திய இளைஞர்கள் இந்தியாவுக்கு நாடுகடத்தப்படுவர்.

இவ்விழுவைப் படகில் வந்த மேலும் 3 இலங்கையரில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர். ஒருவருக்கு பீடி இலைகளைக் கடத்திவந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இக்கடத்தல் முயற்சியைத் தலைமன்னுர் கடலில் வைத்து முறியடித்த இராணுவத்தினர் இழுவைப் படகில் வந்தவர்களைக் கைதுசெய்து, இழுவைப் படகினையும், கடத்தல் பொருட்களையும் மன்னுர் சுங்க அதிகாரியிடம் ஒப்படைத்திருந்தனர். [க]

பரு. எரிபொருள் நிலைய கொள்ளை:

# தேடப்பட்ட இரு சந்தேகநபர்கள் கைது

## மற்றுமொருவர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ப. நோ. கூ. ச எரிபொருள் நிலையக் கொள்ளை தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்ட மூவரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நடந்த பருத்தித்துறை ப. நோ, கூ. ச. கொள்ளையின் போது 3 பேரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இவர்களை விசாரணை செய்த விஷேச பொலிஸ் கோஷ்டியினர், கொள்ளையடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை வாங்கிக்கொடுத்தவரையும் அவருக்கு உதவியாக இருந்தவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் சோப்பாய்த் தொகுதியைச்சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் ஒருவர் தலைமறைவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. [மா]

# கொள்ளையரைப் பிடித்த இளைஞர்க்கு சன்மானம்!

(மன்னுர்)

முள்ளிக்குளத்திலிருந்து மன்னுர் நோக்கி வந்த மினிபஸ் சில்பிரயாணிகளிடம்கொள்ளையடித்த கொள்ளையர்களை மடக்கிப்பிடித்து கொள்ளையர்களையும் கொள்ளையர் வைத்திருந்த துப்பாக்கியையும் பொலிசாரிடம் ஒப்படைத்த 4 இளைஞர்களுக்கு பொலிஸ் திணைக்களத்தினுல் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவத்தின் போது எல். சந்திரசிறீ, எம். நந்தசேன ஆகிய இருகொள்ளையர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தப்பியோடிய இரு கொள்ளையர்களான பீட்டர், பியசிறீ ஆகிய இருவரையும் காட்டுப் பகுதி உத்தியோகத்தர்கள் காட்டினுள் வைத்துப்பிடித்து வவனியா பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். (க)

## 5 சத லாபம்; ரூ. 200 அபராதம்

(மன்னுர்)

சவர்க்கார வற்பனையில் 5 சதம் கொள்ளை லாபம் பெற்ற வர்த்தகர் ஒருவருக்கு 200ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

2ரூபா 35சதமாக விற்பனை செய்யப்படவேண்டிய சன்லைட் சவர்க்காரத்தை 2 ரூபா 40 சதமாக விற்பனை செய்ததாக என மன்னுர் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எச். எம் ஏ குத்தூஸ் உப்பக்கடவையைச்சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மீது மன்னுர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்,

இவ்வழக்கினை விசாரணை செய்த மன்னுர் நீதவான திரு. மடவெல கொள்ளை லாபம் பெற்ற வர்த்தகருக்கு 200 ரூபா அபராதம் விதித்தார்.

## ஊழியர் சேவை நன்கொடை சட்டமூலம்

[கொழும்பு]

ஊழியர்சேவை நன்கொடை சட்ட மூலம் இவ்வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதனுல் 35 லட்சத்திற்கும் மேற்பட்ட கூட்டுத்தாபன, தனியார் துறை, ஊழியர்கள் நன்மையடைவார்கள் என்று தொழில் அமைச்சர் காப்டன் செனிவிரத்ன தெரிவித்தார்.

இதுசட்டமானதும் கூடிய விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார், [வெ]

## புதிய கூட்டத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற சம்பிரதாயபூர்வமான அமர்வுக்கு ஜனுதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்தன தலைமை தாங்கி உரை நிகழ்த்துவார்.

கட்சித் தலைவர்களின் மகாநாட்டில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. [இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட்டு தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.